வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : STC 398 of 2021

வழக்கு சாட்சி - DW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீனிவாசம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ராமமூர்த்தி | தொழில் | : | கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | Central GST – Tiruppur | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 13.11.2024.

(புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 13.11.2024**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு உதவி ஆணையர் எனக்கு அதிகார கடிதம் வழங்கியுள்ளார். அந்த **அதிகார கடிதம் சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி வாரண்டடில் குறிப்பிட்டுள்ள பதிவுகளை வைத்து நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு நிறுவனத்திற்கு சரக்குகளை சட்டப்படியாக அனுப்பும்போது E-way Bill கட்டாயம் பதிவு செய்யவேண்டும். E-way Bill கட்டாயம் இருந்ததால் தான் GST தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். E-way Bill இல்லாமல் ஒரு GST தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். அதன்பின்பு நாங்கள் அறிவிப்பு அனுப்பி நிரூபிக்கசொல்லுவோம். அவர்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை சமர்பித்து நிரூபிக்க சொல்லுவோம். நிரூபிக்காவிட்டால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

2) வாதி நிறுவனத்தில் மாநில GST வரி மட்டுமே உள்ளது. நாங்கள் மத்திய GST வரி அலுவலகம் என்பதால் எங்களிடம் அந்த பதிவுகள் இல்லை. மாநில GST வரி சம்மந்தமாக எங்களால் எதுவும் பார்க்கமுடியாது. மாநில GST வரியை மாநில GST அலுவலகம் தணிக்கை செய்வோமா என்றால் இல்லை. அது தனிப்பட்ட அலுவலகம் ஆகும். இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள இரண்டு இன்வாய்களுக்கும் எங்களுக்கு எதுவும் தகவல் தெரியாது

என்றால் சரிதான். அந்த இரண்டு இன்வாய்ஸ்கள் சம்மந்தமாக மாநில GST அலுவகத்தை தான் கேட்கவேண்டும்.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை** :

3) வாதி நிறுவனத்தின் GST எண்ணை எங்களை தவிர வேறு யார் பதிவிறக்கம் செய்யாமல் என்றால் எங்களை தவிர வாதி நிறுவனம் பதிவிறக்கம் செய்யலாம். அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. எதிரி நிறுவனம் GST தொகை செலுத்திய பின்பு வாதி நிறுவனம் TDS போட்டு எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். இன்வாய்ஸ் மூலமாக GST 1 தாக்கல் செய்யதால், எதிரி நிறுவனம் GST 2 B மூலமாக இரண்டையும் சரிபார்த்தால் இன்வாய்ஸின் உண்மை தன்மையை தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். GST 1, GST 2 B, GST 3 B ஆகியவற்றை சரிபார்த்தால் உண்மை தன்மையை கண்டறியலாம். இந்த வழக்கில் கோரியுள்ள ஆவணங்களை என்னால் சமர்ப்பிக்க இயலவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA
Date: 2024.11.13 18:06:56 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.